# யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டில் மரபுவழிச்சீர்மியம்

**பேராசிரியர். கி. விசாகரூபன்,**
சிரேஷ்ட பேராசிரியர், தமிழ்த்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
kvisakaruban@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்**

யாழ்ப்பாணத் தமிழர் பண்பாடு மிகவும் தொன்மையான ஒன்றாகும். மிகவும் கட்டிறுக்கான பண்பாட்டுப் பாரம்பரியங்கள் பலவற்றைக்கொண்ட யாழ்ப்பாணத் தமிழ்ச்சமூகம், பழைமைபேணுதலில் மிகுந்த ஆர்வத்தைக் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. அந்நிய ஊடாட்டம் காரணமாக மேலைத்தேயப் பண்பாட்டு நடைமுறைகள் பலவும் இப்பண்பாட்டில் ஊடுருவிய நிலையிலும் தனக்கான தனித்துவங்கள் சிலவற்றை இப்பண்பாடு இன்றும் தக்கவைத்துள்ளதனைக் அவதானிக்க முடிகிறது. அவற்றுள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஒரு பண் பாட்டுக்கூறாக அமைவது மரபுவழிச்சீர்மிய நடைமுறையாகும். மேலைப்புல மருத்துவத்தின்வழி நவீன உள ஆற்றுப்படுத்தல் சிகிச்சை நடைமுறைகள் வருவதற்கு முன்பே யாழ்ப்பாணத் தமிழரிடையே வளமான ஒரு மரபுவிச்சீர்மியப் பாரம்பரியம் (Traditional Councilling Mechanisim) ஒன்று வழக்கில் இருந்து வந்துள்ளதனைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். இக்கட்டுரையானது யாழ்பாணத் தமிழரிடையே குறிப்பாக இந்துக் களிடையே அன்று தொட்டு இன்றுவரை வழக்கில் இருந்துவரும் மரபு வழிச்சீர்மியங்களையும் அவற்றின் நடைமுறைகளையும் இனங்கண்டு வெளிக்கொணர் வதை ஆய்வு நோக்கங்களாகக் கொண்டுள்ளது. நேரடி அவதானம், களஆய்வுப் பணி மூலம் திரட்டிக் கொள்ளப்பட்ட முதன்மைத்தரவுகள் மற்றும் ஆய்வுப் பொருண்மை யோடு தொடர்புடைய ஆய்வுநிலை எழுத்துக்களான இரண்டாம்நிலைத் தரவுகள் என்பன விவரணஆய்வு (Descriptive Standing) முறையியலில் இக்கட்டுரையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** உளமருத்துவம், சீர்மியம், பண்பாடு, மந்திர சமய மருத்துவம்

## அறிமுகம்

யாழ்ப்பாணப் பண்பாட்டில் “குடும்பம்” என்பது மிகமுக்கியமான ஒரு நிறுவன மாக இருந்துவருகிறது. கணவன், மனைவி, பிள்ளைகள், தாய், தகப்பன் முதலானோரை உள்ளடக்கிய குடும்பங்கள் பலவற்றை யாழ்ப்பாணத்தில் இன்றும் பார்க்கமுடியும். தவிர இரத்த உறவுகளாகிய பாட்டன், பாட்டி, மாமன், மாமி முதலானோரை உள்ளடக்கிய சில கூட்டுக்குடும்பங்களையும் இப்பண்பாட்டில் பார்க்கமுடியும். வேலைகளில் பங்கீடு, கூட்டுச்சமையல், குடும்பத்தில் மூத்தோரை மதிப்பது முதலான பல்வேறு பண்புகளைக் கூட்டுக்குடும்பத்தில் பார்க்கமுடியும்.

குடும்பங்கள் பலவற்றை உள்ளடக்கிய சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகள், துன்பங்கள் தோன்றுவது இயல்பாக உள்ளது. தனிநபர் பிரச்சினை குடும்பத்தைப் பாதிக்கும், குடும்பப்பிரச்சினை சமூகத்தைப்பாதிக்கும். எனவே பிரச்சினைகளை இயன்றவரை விரைவாகவும், சுருக்கமாகவும் தீர்த்துக்கொள்வது பலவற்றுக்கும் நன்மையளிப்பதாக முடியும். இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கிராமியப் பண்பாட்டில் உள்ள "பொறிமுறைகளை" (Mechanisim) நாடுவது யாழ்ப்பாணத் தமிழர் மரபாக இருந்துவந்துள்ளது. குடும்பப்பிரச்சினைகள், தனிநபர்பிரச்சினைகள், உளப் பாதிப்புக்கள் எனப் பலவற்றுக்கும் பரிகாரமளிக்கின்ற கிராமியப்பண்பாட்டுப் பொறி முறையாக "மரபுவழிச்சீர்மியம்" (Traditional Councelling) இன்றுவரை யாழ்ப்பாணத் தமிழரிடையே வழக்கிலிருந்துவருகிறது.

"மரபுவழிச்சீர்மியம்" என்பது ஒரு உளவியல் சார்ந்த பரிகாரமாக உள்ளது. பெரும்பாலும் சமயத்துடன் இணைந்த ஒன்றாக இது காணப்படும். பொதுவாகக் கிராமியப்பண்பாட்டில் மக்கள் தமக்குத் துன்பங்கள் நேர்கின்றபோது முதலில் நாடுகின்ற இடமாக அமைவது அவரவர் குலதெய்வக் கோவில்களே எனலாம். குலதெய்வங்களுக்குப் பல்வேறு வேண்டுதல்களை முன்வைத்துப் பல்வேறு வகையான "நேர்ச்சை" (நேர்த்தி)களை வைப்பர். நல்லது நடந்தவுடன் நேர்ச்சைகளை உரிய முறைப்படி நிறைவேற்றுவர்.

மரபுவழிச்சீர்மிய நடைமுறைகள் பலவாகக் காணப்படுகின்றன. பார்வை பார்த்தல், நினைத்தகாரியம் கேட்டல், வாக்குக்கேட்டல், நூல்கட்டுதல், விபூதி போடுதல், நாகதோஷம் நீக்குதல், விற்றுவாங்குதல், இழைக்கட்டுதல், நீர்ஓதிக் கொடுத்தல், பூக்கட்டுதல், தடைவெட்டுதல், புத்திமதிகூறுதல் (சிவசுப்பிரமணியம், ஆ., 1999: பக். 152 154) முதலானவையாக இவை காணப்படுகின்றன. நாட்டார் வழக்கியலில் இவ்வாறான நடவடிக்கைகளை மந்திரசமய மருத்துவத்துக்குள் அடக்கிப்பார்க்க முடியும்.

பார்வை பார்த்தல்

மரபுவழிச்சீர்மியத்தில் "பார்வைபார்த்தல்" மிகமுக்கியமான ஒன்றாக உள்ளது. உளக்குறைபாடு உள்ள ஒருவருக்கு மதகுருவோ, சோதிடரோ, பாரம்பரிய வைத்தியரோ, நிறைவாழ்வு வாழ்ந்த மூத்தவரோ பார்வை பார்ப்பது வழக்கம். பொதுவாக மதகுருமாரே இவ்வாறான சீர்மியத்தை வழங்குகின்றனர்.

பார்வைபார்ப்பவர் மீதான "பெருநம்பிக்கை" என்பது நோயாளிக்கு இருத்தல் அவசியமாகும். விபூதி, வேப்பிலை, தர்ப்பைக்கட்டு முதலான பொருட்கள் கொண்டு இச்சீர்மியம் நிறைவேற்றப்படும். சீர்மியம் செய்பவர் இருக்கும் இடத்துக்குப் பார்வை பார்க்கப்பட வேண்டியவரை எடுத்துச் செல்லப்படுவதே பெரும்பான்மை வழக்கமாக உள்ளது. பார்வைபார்த்தல் செயற்பாட்டுக்கு உட்படுத்தப்படும் ஒருவர் நீராடிப் புனிதமாக இருத்தல் அவசியமாகும்.

உளநோயின் தன்மை, நோயாளியின் ஒத்துழைப்பு என்பவற்றுக்கேற்ப பார்வை பார்த்தலில் வன்மை மற்றும் மென்மைத்தன்மை என்பன அமைந்து காணப்படும். அவசியமான வினாக்களைப் பார்வைபார்ப்பவர் தொடுப்பார். உளப்பாதிப்புக் குள்ளானவர் அல்லது அவரை அழைத்துக்கொண்டு செல்பவர் அவ்வினாக்களுக்குப்

பலவிதமாகப் பதிலளிப்பார். உளப்பாதிப்புக்குள்ளானவரின் மனநிலைக்கேற்ப இப்பார்வைபார்த்தல் செயற்பாடு சற்று நீண்டு செல்லும். பார்வைபார்த்தலின் நிறைவில் பிரசாதமாக விபூதி முதலான பொருட்கள் வழங்கப்படும். பார்வை பார்ப்பவர்களுக்கான தட்சணையில் நிர்ணயக் கட்டணங்கள் என்று எவையும் இருக்காது. அவரவர் விருப்பு மற்றும் வசதிக்கேற்ப தட்சணை மாறுபடும். தட்சணையினைப் பார்வைபார்ப்பவர் தனது கைகளால் நேரடியாகப் பெற்றுக்கொள்ளும் வழக்கம் இச் சீர்மியச்செயற்பாட்டில் இல்லை. அவ்வாறு பெற்றுக்கொண்டால் "தொழில் சித்திக்காது" என்பது நம்பிக்கை வழக்கமாக உள்ளது.

நினைத்தகாரியம் கேட்டல்

தனிநபர்களுக்கு ஏற்படுகின்ற துன்பங்கள் பலவற்றுக்குத் தீர்வளிப்பதாக "நினைத்தகாரியம் கேட்டல்" என்ற சீர்மியச்செயற்பாடு அமைந்து காணப்படுகிறது. அடிப்படையில் இது சோதிடத்துடன் தொடர்புபட்ட ஒன்றாக உள்ளது. நினைத்த காரியம் கேட்கச் செல்பவர்கள் தாம் வீட்டிலிருந்து புறப்பட்டுச்செல்லும் நேரம் அல்லது சோதிடர் வீட்டுக்குள் காலடி வைக்கும் நேரத்தைக் குறித்துக்கெள்ளல் வேண்டும். இவற்றை விடுத்து வேறு ஏதாவது ஒரு திறவுச்சொல்லை (Key Words) நினைத்தகாரியம் சொல்பவர் கேட்கலாம். வெற்றிலை முதலான பூசைப்பொருட்களின் துணைக்கொண்டும் சிலர் நினைத்தகாரியம் சொல்வர்.

துன்பத்துக்குள்ளானவர் நினைத்தகாரியம் சொல்பவர்மேல் முழுநம்பிக்கை கொண்டுள்ளதால் அவர் சொல்வதை "வேதவாக்காக" உள்வாங்குவார். அவரது துன்பத்துக்கான உடனடிப் பரிகாரமாக நினைத்தகாரிய வாசகங்கள் அமைந்து காணப்படும்.

வாக்குக்கேட்டல்

கோயில்களை அண்டியதாகக் கலையாடுபவர்கள், உருவாடுபவர்கள் அல்லது சாமியாடுபவர்களால் "வாக்குச்" சொல்லப்படுகிறது. வாக்குச்சொல்பவர், வாக்குச் சொல்லப்படுகின்ற கோவில்சூழல், கலையாடும் இடத்தில் கூடியிருக்கின்ற சமூகத்தின் பல்வேறு தரப்பட்ட மக்கள் முதலானவற்றால் வாக்குச்சொல்லுக்குப் பலம் கிடைக்கிறது.

கலையாடுபவர்கள் தம்மைப் புனிதப்டுத்திக்கொண்டு விரதமிருந்து பூசை வழிபாடுகளில் கலந்துகொள்வர். கோவிலைச்சுற்றிய மேளதாளங்கள் மற்றும் மணி முதலானவற்றின் ஆரவாரம் கற்பூரம், சாம்பிராணி முதலானவற்றின் வாசனைகள், நம்பிக் காத்திருக்கும் அடியவர் கூட்டம் முதலானவற்றால் கலையாடுபவர் "மெல்ல மெல்ல" உருவேற்றப்படுவார். சடுதியாகத் தம்மை மறந்து கலைக்கு ஆட்படுவார். கலையாட்டத்தின் ஆரம்பப்பகுதி பெரும்பாலும் மூர்க்கமாக இருக்கும். மெல்லமெல்ல அந்த மூர்க்கம் குறைந்து சூழ்ந்திருப்பவர்களைக் கண்களைத்திறந்து அவதானிக்கும் நிலைக்குத் திரும்பும். கலையாடுபவரின் குரல் உறுதியாகவும் ஓங்கியதாகவும் இருக்கும். (தயா சோமசுந்தரம், சிவயோகன், சா., 2000: ப. 36) சுற்றியருப்பவர்களின் தலையைத் தீண்டியோ தீண்டாமலோ வாக்குச் சொல்லப்படுதல் மரபாக உள்ளது.

வாக்குக்கேட்பவர்கள் ஒவ்வொருவராகத் தமது பிரச்சினைகள், துன்பங்களைச் சொல்வர். சொல்பவர்களுக்கான பரிகாரங்களையும் தீர்வுகளையும் கலையாடுபவர் சொல்லுவார். மக்களிடம் குறைகளைக் கேட்காமலே அவரவர் பிரச்சினைகளைக் கூறி அவற்றுக்கான பரிகாரங்களைச் சொல்லும் மரபும் இக் கலையாடலில் உண்டு.

எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் சம்பவங்களையும் சிலர் பட்டியற்படுத்துவர். நிகழ்கால நடப்புகள் குறித்துச் சொல்லப்படும் வாக்கினால் வசீகரிக்கப்படும் ஒருவர், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகப் பெரிதும் கவனம் செலுத்துவார். அதற்கூடாக மன அமைதியும் பெற்றுக்கொள்வார்.

அடியவர்கூட்டத்தைப் பொறுத்து கலையாட்டநேரம் நீடிக்கும். கலையாடலுக்கு உகந்த சூழல் இதில் பெரும் பங்கை வகிக்கும். நோய்களுக்கான மருந்தாக விபூதி, பூக்கள் முதலானவற்றைக் கொடுப்பர். இம்மரபில் தட்சணை எதுவும் வழங்கப்படுவதில்லை. கலையாடலின் நிறைவில் ஆடுபவர் மூர்ச்சையடைந்து உணர்வில்லாது வீழ்ந்துவிடுவார். இது அவரிடம் குடிகொண்டிருந்த குறித்த தெய்வம் விடைபெற்றுச் சென்றுள்ளதைக் குறிக்கும் (மலையேறுதல்). இதன் பின்னர் வாக்குச்சொல்லல் நடைபெறமாட்டாது.

கிராமியப்பண்பாட்டில் கலையாடலினூடாக வெளிப்படும் வாக்குச் சொல்லலுக்கு அதிக "கிராக்கி" காணப்படுகிறது. மக்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வு வடிகாலாக இது உள்ளது. சமூக உறுப்பினர்கள் பலரும் சூழ்ந்துள்ள அவையில் (Forum) அச்சமூக உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வைக் கலையாடுபவர் மிகவும் நாசூக்காகச் சொல்லிவிடுவார். நல்லதோ கெட்டதோ கடவுள்வாக்காக அதனை எடுக்கவேண்டிய கடப்பாடு அச்சமூக உறுப்பினர்களுக்கு உரியதாகின்றது. யாழ்ப்பாணச் சமூகத்தில் இன்றும் இந்த "வாக்குக்கேட்டல்" மரபை கிராமியப் பண்பாட்டில் அவதானிக்க முடிகிறது.

நூல்கட்டுதல்

உளப்பாதிப்புக்கான ஒருவகைத்தீர்வாக மந்திரித்த நூல்களைக் கையிலும், அரையிலும், கழுத்திலும், காலிலும் அணிந்துகொள்ளுதல் பாரம்பரிய வழக்கமாக உள்ளது. அணியப்படும் நூல்கள் பூசைவழிபாடுகளில் உள்ளிடுத்தப்பட்டதாகவோ அல்லது அப்போதுதான் புனித விக்கிரகங்களிலிருந்து எடுத்து அணிவிக்கப்படுவதாகவோ இருக்கும். நீளமான நூலில் ஆங்காங்கே முடிச்சுக்கள் பலவும் மந்திரப் பின்னணியில் போடப்பட்டிருக்கும். எளிதில் அவிழ்ந்துவிடாதபடி இந் நூல்கள் அணிவிக்கப்படும். இந்நூல்கள் பல்வேறு வண்ணங்களில் வடிவங்களில் அமைந்து காணப்படும். சிங்களச் சமூகத்தினர் புத்தவிகாரங்களில் வெள்ளை நிறத்திலான நூல்களைப் பெரிதும் அணிந்து கொள்கின்றனர். பெரும்பாலும் எல்லாச் சமயத்தினருமே இந்தவகையான சீர்மியத்துக்குப் பெரிதும் அடிமையாகி (Adict) இருப்பதனைப் பார்க்கமுடிகிறது. இதில் படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற வேறுபாடுகளைக் காண்பது அரிதாக உள்ளது.

நூல்கட்டுதல் தொடர்பில் நாள், கோள் பார்க்கின்ற மரபு யாழ்ப்பாணத்தில் காணப்படுகிறது. செவ்வாய், வியாழன், வெள்ளி முதலான நாள்களில் பெரும்பாலும் நூல்களைக் கட்டிக்கொள்வர். கோவில்குருக்கள், சமயப்பெரியோர் முதலானோர் இச்செயற்பாட்டை முன்னெடுப்பது வழமையாக உள்ளது. மந்திரித்த நூல்களை அணிந்துகொள்வதால் அவற்றை அணிந்துகொள்பவர்களுக்கு ஒருவித "காவல்" கிடைப்பதாக மக்கள் நம்புகின்றனர்.

யாழ்ப்பாணப் பண்பாட்டில் மனிதர்களுக்கு மட்டுமல்லாது விலங்குகள்,

வாகனங்களுக்குக்கூட மந்திரித்த நூல்களைக் கட்டும் மரபு இன்றுவரை இருந்து வருகிறது. படித்தவர் முதற்கொண்டு பாமரர்வரை நூல்கட்டிக்கொள்ளும் மரபுவழிச் சீர்மியத்தின்பால் பெருவிருப்பும் நம்பிக்கையும் கொண்டவர்களாக உள்ளார்கள். வெளிநாட்டில் உள்ளோர்க்கு அவரவர் குலதெய்வக் கோவில்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் நூல்கள் இன்றுவரை அஞ்சலில் அனுப்பப்பட்டுவருவதனைப் பார்க்க முடிகிறது.

உடம்பிலிருந்து பல்வேறு காரணங்களால் அகற்றிக்கொள்ளப்படும் புனித நூல்களைக் கடலிலோ அல்லது பிற நீர்நிலைகளிலோ அல்லது காலால் மிதிபடாத இடங்களிலோ இட்டுவிடுதல் மரபாக உள்ளது. புனிதநூல்களைத் தீட்டுப்படுத்தினால் தீட்டுப்படுத்துபவர்களுக்குத் துன்பம் நேரும் என்பது நம்பிக்கையாக உள்ளது.

விபூதிபோடுதல்

விபூதிகொண்டு மந்திரித்தல் என்பது பெருவழக்கான சீர்மியமாக உள்ளது. துன்பத்துக்குள்ளான ஒருவரை ஆலயத்துக்கு இட்டுச்சென்று அவ்வாலயத்தின் குருக்களைக் கொண்டு இதனை நிறைவேற்றுவர். விபூதிகொண்டு மந்திரித்தலை அனைத்துக் குருக்கள்மாரும் நிகழ்த்தினும்கூட, சில குருக்கள்மார் இச்சீர்மியச் செயற்பாட்டில் கைராசிக்காரர்களாகவும், நிபுணத்துவம் வாய்ந்தவர்களாகவும் உள்ளனர். சிறுபான்மையாக, சமயவழிபாட்டில் பெரிதும் முனைந்துள்ள பெரியோரில் சிலரும் “விபூதிபோடலை” வழக்கமாகக் கொண்டிருப்பதனை அவதானிக்கமுடிகிறது. விபூதி போடுகின்றபோது அவரவர் “வாலாயப்படி” சிலவகையான மந்திரங்களைப் பிறர் கேட்கக்கூடியவாறும் கேட்காதவாறும் முணுமுணுப்பர்.

செவ்வாய், வியாழன், வெள்ளி முதலான நாட்களில் விபூதிபோடுதல் நடைபெறுதல் வழக்கமாகும். துன்பத்துக்குள்ளானவருக்குப் பாதாதிகேசம்வரை விபூதிகொண்டு தடவி சீர்மியச்செயற்பாடு மேற்கொள்ளப்படும். நோய்ப்பாதிப்பு நீங்கும்வரை மூன்று தொடக்கம் ஐந்து நாட்கள்வரை விபூதிபோடல் செயற்பாடு நீண்டு செல்லும். இச்சீர்மிய நிறைவில் நெற்றியில் நீறிடலுடன் வாயிலும் நீற்றை இடுவர். பிரசாதமாக மந்திரித்த விபூதியை மடித்துக்கொடுத்து பிரத்தியேக இடங்கள் சிலவற்றில் வைத்துக்கொள்ளச் சொல்வர். இவ்வாறான செயற்பாடுகளால் உளப்பாதிப்புக்குள்ளனவர்கள் சிறிதுசிறிதாக அவற்றிலிருந்து விடுபடத் தலைப்படுவர்.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோவிலில் விபூதிபோடல் மரபு இன்றும் உயிர்த்துடிப்புடன் வழக்கிலிருந்து வருகிறது. முருகன் அடியவர்கள் விபூதியை “மருந்து” என்று குறிப்பிடுதலை வழக்கமாகக் கொண்டுள்ளனர். பூசையின் நிறைவில் விபூதித்தட்டுடன் அடியவர்களை நோக்கி வரும் குருக்கள், அடியவர்களின் தலை, வாய் மற்றும் அவரவர் வேண்டும் அங்கப்பகுதிகளின்மீது விபூதியினை இடுவதனை இன்றும் பார்க்கமுடியும். பாதிப்புக்குள்ளான அங்கங்களின்மீது போடப்படுகின்ற விபூதியானது செயலிழந்த அங்கங்களை மீளவும் வழமைக்குக் கொண்டுவரும் என்பது அடியவர்களின் அசையாத நம்பிக்கையாக உள்ளது.

நாகதோஷப்பரிகாரம்

ஒருவரின் ஜாதக அமைப்பில் “நாகதோஷம்” காணப்படுவது ஒருவரைப் பல்வேறு நிலைகளிலும் வருத்தக்கூடிய ஒன்றாகக் கருதப்படுகிறது. சோதிடர்களின் பரிந்துரைப்படி நாகதோஷத்தினை நீக்கிக்கொள்ளும் வழக்கம் இன்றும் யாழ்ப்

பாணத்தில் பெருவழக்காக உள்ளது.

நாகதோஷத்தினால் திருமணத்தடை, குழந்தைப்பேறின்மை, உடற்சுகமின்மை முதலான துன்பங்கள் நேரும் என்பது மரபான நம்பிக்கையாக உள்ளது. ராகு, கேது பரிகாரத்துக்கெனச் சிலவகையான நடைமுறைகள் காணப்படுகின்றன. நாகதோஷப் பரிகாரத்துக்குரிய சிறப்பான நாளாகச் சனிக்கிழமை சுட்டப்படுகிறது. நாகதோஷப் பரிகாரம் செய்யமுனையும் ஒருவர் விரதமிருந்து புனிதநீராடிப் புத்தாடையணிந்து பூசைப்பொருட்கள் கொண்ட அருச்சனைத்தட்டுக்குப் புறம்பாக இரண்டு தட்டுக்களில் முறையே கரும்பாம்பு, செம்பாம்மை பாலில் இட்டு அவற்றைச் சுமந்துகொண்டு ஆலயத்தை மும்முறை வலம்வந்து நவக்கிரகபீடத்தில் ஒப்படைத்து வழிபாடாற்றுதல் வேண்டும். இதனை இச் சீர்மியச் செயற்பாட்டில் "கரும்பாம்பு செம்பாம்பு விடல்" எனவும் அழைப்பர்.

நாகதோஷப்பரிகாரம் செய்தபின்னர் திருமணத்தடை நீங்குதல், குழந்தைப் பாக்கியம் பெறுதல் முதலியன் நடைபெறுகின்றன. இதனால் மக்களில் பெரும்பாலா னோர் இச்சீர்மியமரபைப் பெரிதும் கருத்திலெடுத்து அதனை உரியமுறைப்படி நிறைவேற்றி வருவதனைப் பார்க்கமுடிகிறது.

நாகதோஷப்பரிகாரத்துக்கு சிவன் ஆலயம், விக்ஷ்ணு ஆலயம் என்பன பெரிதும் உகந்தவையாகச் சொல்லப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலயம், கீரிமலை நகுலேஸ்வரம், வல்லிபுர ஆழ்வார் கோவில் முதலானவை இவ்விததோஷ பரிகார நடவடிக்கைகளுக்குப் பெயர்போன ஆலயங்களாகக் காணப் படுகின்றன. தோஷபரிகாரத்தைச் செய்யும் ஒருவர் உளவியல் ரீதியாக அழுத்தத்தி லிருந்து விடுபடுவதனைப் பார்க்கமுடியும்.

விற்றுவாங்குதல்

யாழ்ப்பாணப் பண்பாட்டில் சமயவழிபாட்டுப் பின்புலத்தில் "விற்று வாங்குதல்" என்ற தொடருக்குத் தனியான ஒரு அர்த்தம் காணப்படுகிறது. சோதிட நம்பிக்கையில் பெரிதும் ஊறிப்போன யாழ்ப்பாணச் சமூகத்தில் எல்லாவற்றிற்குமே சோதிடரை நாடுதல், பஞ்சாங்கம் பார்த்தல் என்பன வழமையான செயற்பாடுகளாக உள்ளன.

குடும்பம் ஒன்றில் பல்வேறு பிள்ளைகள் காணப்படுவர். இப் பிள்ளைகளில் சிலர் பெற்றோர்களின் ஜாதக அமைப்பின்படியும் பிள்ளைகளது ஜாதக அமைப்பின் படியும் ஒருவருடன் ஒருவர் ஒத்துப்போவதில், அல்லது ஒரே குடியிருப்பில் ஒத்து வாழ்தலில் பிரச்சினைக்குரியவர்களாக இருப்பர். வேறுசில பிள்ளைகளுக்கு ஜாதக அமைப்பில் கிரகக் குறைபாடுகள், தோஷங்கள் காணப்படலாம். பெற்றோருக்கு இவை பெரிய உளப்பிரச்சினைகளாகக் காணப்படும். இவ்வாறான சூழ்நிலையில் இப்பிரச்சினைகளிலிருந்து விடுபடும் ஒருவகை உபாயமாகக் குறித்த பிள்ளைகளைத் தமது குலதெய்வக் கோவில்களில் விற்று, அப்பிள்ளையைப் பிறிதொருவரைக் கொண்டு வாங்குவதனைப் பார்க்கமுடியும். பிள்ளைகள் தொடர்பான ஏலத்தினைக் குறித்த மதகுருவோ அல்லது நிர்வாகக் கட்டமைப்பைச்சார்ந்த ஒருவரோ சம்பிருதாய மாக நடத்திவைப்பார். பெரும்பாலும் சிறுபராயத்திலேயே இவ்விற்றுவாங்கல் நடைபெறுதல் மரபு. ஏலம் விடுபவர் விற்பனைக்குரிய பிள்ளையைத் தனது கைகளில் ஏந்தி உயர்த்திப்பிடித்து ஏலம் தொடர்பான விடயத்தை உயர்ந்த குரலில்

பிரகடனப்படுத்துவார். ஆலயத்தில் உள்ள அடியவர் பார்வை இச்செயற்பாட்டின்மீது திரும்பும். ஆனாலும் தொடர்பில்லாதவர்கள் இச்செயற்பாட்டில் வெறும் பார்வை யாளர்களாக மாத்திரமே காணப்படுவர். பிரச்சினைக்குரிய பிள்ளையை யார் வாங்குவது என்பது தொடர்பில் ஒருவிதமான முன்னேற்பாடு இருக்கும். தாய் மாமனைக்கொண்டு ஏலம் எடுத்தல் சிறப்பானதாகக் கொள்ளப்படும். யாழ்ப் பாணச்சடங்கு நடைமுறைகளில் தாய்மாமனுக்கெனத் தனியான முக்கியத்துவம் காணப்படுகிறது. இப்பின்புலத்தில் தாய்மாமன் சிறப்பிடம் பெற்றிருக்கலாம். கட்டுப்படக்கூடிய தொகை ஒன்றுக்குள் இந்த விற்றல்வாங்கல் செயற்பாடு நடைபெறும். இது தொடர்பான பணம் முழுவதும் கோவில் உண்டியலுக்குள் உரியவர்களால் இடப்படும். "விற்றுவாங்குதல்" செயற்பாட்டின் நிறைவில் விசேட அருச்சனை வழிபாடுகள் நடைபெறும். சிலர் அள்ளுகாசையும் தென்னம் பிள்ளையையும் குறித்த ஆலயத்துக்குக் காணிக்கையாகச் செலுத்துவர்.

ஜாதக அமைப்பின் பிரகாரம் பெற்றோருக்கு ஒத்துவராத பிள்ளைகளை இவ்வாறு கோவில்கள்ில் விற்றுவாங்குவதன்மூலம் தமது பிள்ளை புதிதாகத் தமது குடும்பத்தில் இணைந்துகொண்டுள்ளதான ஒரு மனநிலையைப் பெற்றோர்கள் பெற்றுக்கொள்வர். குறித்த கோவிலில் உறையும் கடவுளின் பிள்ளையாக இப்பிள்ளை யைப் பார்க்கவும் முனைவர். இதனால் குடும்பத்தில் காணப்பட்ட மனக்குழப்பமும் நீங்கிவிடும்.

யாழ்ப்பாணச் சமூகத்தில் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பிறிதொரு வழியாக குறித்த பிள்ளையைப் பேரன் பேர்த்தியுடன் வளரவிடுகின்ற நிலைப்பாடும் சிறுபான்மையாகக் காணப்படுகிறது. தந்தையின் ஜாதகத்துடன் ஒத்துவராத பிள்ளைகளில் பெரும்பாலானவர்களே இவ்வாறான நடவடிக்கைகளுக்கு உள்ளா கின்றார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்பிள்ளைகளாகக் காணப்படுவர். கணவனுடைய ஆயுளுக்குப் பங்கம் விளைவிக்கும் இந்த விடயத்தில் மனைவியானவள் பெரும்பாலும் கணவனுடைய நலனைப் பேணுவதிலேயே குறியாக இருப்பாள். கணவனா, பிள்ளையா முக்கியம் என்பது தொடர்பில் கணவனே இது விடயத்தில் மனைவியின் பிரதான தெரிவாக உள்ளமை கருதத்தக்கதாகும்.

நேர்த்திக்கடன் நிறைவேற்றுதல்

மக்கள் தமக்குத் துன்பங்கள் மற்றும் கஷ்டமான நிலைமைகள் ஏற்படுகின்ற போது அவற்றிலிருந்து விடுபட்டு நன்மை நிகழவேண்டும் என்ற நோக்கில் தத்தமது குலதெய்வங்களுக்கு வேண்டுதல்கள் வைத்து நேர்கின்றார்கள். (சோமசுந்தரம் தயா, சிவயோகன், கா., 2000: ப. 32) பின்னர் துன்பங்களிலிருந்து விடுபடுகின்றபோது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுகின்றார்கள். நேர்த்திக்கடன்கள் பலவகைப்படும்.

உடல்உபாதைகளால் பாதிப்படைபவர்கள் பாதிப்புக்குள்ளான குறித்த உடற்பாகங்களைப் பல்வேறுவகையான உலோகங்களினால் செய்து காணிக்கையாகக் குறித்த ஆலயங்களுக்கு வழங்குவர். கண்மடல், காற்பாதம், கை, நெஞ்சுப்பகுதி முதலானவை இவற்றுட் சிலவாகும்.

பிள்ளைப்பேறு குறித்த நேர்த்திகளுக்கு ஈடாகப் "பிள்ளையையும் தொட்டிலையும்" குறித்தவகை உலோகம் மற்றும் மரத்தால் செய்து கொடுத்தல்,

குழந்தையின் நிறைக்கு நிகராகச் சில்லறைப்பணத்தைக் காணிக்கையாக வழங்குதல், பிள்ளையை மடியில்வைத்துத் தூக்குக்காவடி எடுத்தல், காவடிஎடுத்தல், அபிடேகங்கள், பொங்கல், குளிர்த்திபோடுதல், கூத்துப்போடுதல், பாற்குடம் எடுத்தல், அங்கப்பிரதட்டை செய்தல், தீமிதித்தல், மடிப்பிச்சை எடுத்தல், முடியிறக்குதல் முதலானவை இவ்வாறான நேர்த்திக்கடன்களில் சிலவாகும். சிலவகை நேர்த்திக்கடன்களைத் தலைமுறை தலைமுறையாக நிகழ்த்திவரும் வழக்கம் இன்றும் காணப்படுகிறது.

### இழைக்கட்டுதல்

சமூகத்தில் குற்றமிழைத்தவர்கள் தாமாக முன்வந்து தமது குற்றத்தை ஒப்புக்கொள்ளவைக்கும் ஒருவகை உபாயமாக "இழைக்கட்டும்" வழக்கம் காணப்படுகிறது. பெறுமதியான பொருட்கள் களவுபோதல், காணாமல்போதல் முதலானவை தொடர்பில் பெரும்பாலும் இழைக்கட்டுதல் மேற்கொள்ளப்படும்.

அவரவர் நம்பிக்கைக்குப் பாத்திரமான கோவில்களில் இச்செயற்பாடு இடம்பெறும். பெரும்பாலும் சிறுதெய்வப் பாரம்பரியத்துக்கூடாக வரும் கடவுள்மேல் இழைக்கட்டுதலே பலன் விளைக்க வல்லதாகக் காணப்படுகிறது. காளியாச்சி, வைரவர், ஐயனார், வீரபத்திரர், முனி, பிடாரி முதலான கடவுளர்களின்மேல் இழைக்கட்டுதல் மரபாக உள்ளது. இக்கடவுளர்கள் பெரும் பாரம்பரியக் கடவுளர்களைவிடவும் "காங்கை" (வெப்பம்) மிகுந்தவர்களாக நம்பப்படுவதால் குற்றம் இழைத்தவர்கள் பெரிதும் அஞ்சுவார்கள் என்பது நம்பிக்கையாக உள்ளது. குறித்த ஆலயத்தோடு தொடர்புடைய புனிதவிருட்சம், புறவீதியில் அமைந்துள்ள திருவுருவச்சிலைகள், புனிதச்சின்னங்கள் முதலானவற்றின்மேல் இந்தவகையான இழைகள் பெரும்பாலும் கட்டப்படுகின்றன. இழப்புக்குள்ளானவரே இந்த இழைகளைக்கட்டுவது மரபாக உள்ளது. குறித்த குற்றம் இழைத்தவர்களை வெளிக்காட்டுதல் செய்யவேண்டும் என்பது இங்கு பிரதான வேண்டுதலாக வைக்கப்படும்.

இழைக்கட்டுபவர் தான் இழைக்கட்டியுள்ள விடயம் குறித்துப் பலரும் ஒன்றுகூடுகின்ற இடங்களில் கதையைப் பரப்பிவிடுவார். கூட்டுறவுக்கடைகள், சந்தை, ஆலயச்சூழல், நன்னீர்நிலைகள், போக்குவரத்து நிலையங்கள் முதலானவை பலரும் ஒன்றுகூடுகின்ற இடங்களில் சிலவாகும்.

குற்றம்இழைத்தவர் தாமாகவே முன்வந்து குறித்த பொருளை உரிய இடத்தில் வைத்துவிடுவதற்கான ஒரு சிறிய அளவிலான கால அவகாசம் ஒன்றும் இந்த இழைக்கட்டுதலில் வழங்கப்பட்டிருக்கும். நிலைமையின் ஆபத்தைப் புரிந்துகொண்டு குற்றமிழைத்தவர் தாமாகவே குறித்த பொருளை மீளவும் உரிய இடத்தில் வைத்தல் கூடும். அது நடவாமலும் போகலாம். குற்றமிழைத்தவர் மனம்திருந்துவதற்கான வாய்ப்பு இந்த இழைக்கட்டுதலினூடே வழங்கப்படுகிறது. பொருள் கிடைக்காது விட்டாலும் குறித்த தெய்வம் அவர்களை "உரியமுறையில் வருத்தும்" என்ற அதீத நம்பிக்கையானது இழப்புக்குரியவரைப் பெருமளவு சாந்தப்படுத்தும்.

### நீர் ஓதிக்கொடுத்தல்

உளநலம் பாதிக்கப்பட்ட ஒருவருக்கான சிகிச்சைமுறைகளில் ஒன்றாக "நீர் ஓதிக்கொடுத்தல்" காணப்படுகிறது. தண்ணீரில் ஓதுதற் செயற்பாட்டை ஆலயக்

குருக்கள், ஊரிலுள்ள வயதுமுதிர்ந்த நிறைவாழ்வுவாழ்ந்த பெரியோர்கள் முதலானோர் மேற்கொள்கின்றனர்.

குறித்த சில ஆலயங்களும் குறித்த சில குருமார்களும் இக்காரியத்தில் தேர்ந்தவர்களாகவும் நம்பிக்கைக்குரியவர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

செவ்வாய், வியாழன், வெள்ளி முதலான நாட்களில் இந்த நீர்ஓதிக்கொடுத்தல் செயற்பாடு நடைபெறும். பெரும்பாலும் "பொழுதுசாயும்வேளை" இச்செயற் பாட்டுக்கு உகந்த நேரமாகக் காணப்படுகிறது.

நீர்ஓதிக்கொடுப்பவரின் முன்னே உளப்பாதிப்புக்குள்ளானவர் இருத்திவைக்கப் படுவார். பாத்திரம் ஒன்றில் உள்ள நீரின்மீது வாய்பேசாது ஒருவித கருவிகொண்டு ஓதுதல் செயற்பாடு நடைபெறும். பெரும்பாலும் சத்தகக்காம்பு, பாக்கு வெட்டிக் காம்பு, கரண்டி இவற்றில் ஏதாவது ஒன்றினால் ஒருவிதமான மந்திரத்தை முணுமுணுத்தபடி ஓதுபவர் நீரைக் கலக்குவார். "எல்லாம் சரிவரும்", "இண்டை யோட எல்லாம்சரி", "இனி எல்லாம் வெளிச்சம்தான்", "துலைஞ்சுது சனியன்" முதலான தொடர்கள் மட்டுமே தெளிவாகக் கேட்கும். பாதிப்புக்குள்ளானவரின் மனநிலைக் கேற்ப இந்தக் கலக்கலும் முணுமுணுப்பும் நீண்டு செல்லும். தன்னை உற்றுநோக்கிய தான இந்த நீர்ஓதற் செயற்பாட்டால் உளப்பாதிப்புக்குள்ளானவர் தூண்டப்படுவார். இதனால் தனக்குண்டான துன்பம் நீங்கிவிடும் என்ற நம்பிக்கையை அவர் பெறுவார். தண்ணீர்ஓதலின் நிறைவில் அந்தப் புனிதநீர் பாதிப்புக்குள்ளானவரின்மேல் தெளிக்கப் பட்டு சிறிது பருகவும் கொடுக்கப்படும். மீதமுள்ளநீரைப் போத்தலில் நிரப்பி வீட்டுச் சூழலிலும் கிணற்றிலும் விடுவதற்காகக் கொடுத்தனுப்புவது வழக்கமாக உள்ளது.

செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி ஆகிய கிழமைகளில் ஆலயக்குருக்களினால் ஓதிக்கொடுக்கப்படும் நீரை வாங்கிவந்து கிணற்றிலும், வீட்டினுள்ளும், வீட்டுச் சூழலிலும் தெளிப்பதான நடைமுறையொன்றும் இதுதொடர்பாகப் பரவலாக வழக்கிலிருந்துவருகிறது. இச்செயற்பாடு முழுக்குடும்பத்துக்குமான ஒருவித "காவலை" வேண்டி மேற்கொள்ளப்படுகின்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. சிலர் இதனைக் கிரமமாக மேற்கொண்டுவருவதனை அவதானிக்க முடிகிறது. நீரில் ஓதுவதற்கு முன்பாக இச்செயற்பாட்டை மேற்கொள்பவர் வீட்டின் வாசலைப்பற்றி வினாவுவார். குறிப்பாகக் "கிழக்குவாசலா", "மேற்குவாசலா" என வினாவுவார். வாசலின் திசை அமைப்புக்கேற்ப ஓதுதல் நடைபெறுவதாக நம்பப்படுகிறது. இந்த ஓதுதல் வித்தியாசங்கள் எவற்றையும் ஓதுதற்செயற்பாட்டை வேண்டிநிற்பவரால் பிரித்தறிந்து கொள்ளமுடியாது.

பூக்கட்டிப்பார்த்தல்

குறித்த செயற்பாடு ஒன்றில் தீர்மானம் எடுக்கமுடியாத சூழ்நிலைகளில் ஒருவர் தனது குலதெய்வக் கோவிலுக்குச் சென்று பூக்கட்டிப்பார்த்து "இறைவனின் திருவுளப் படி" தீர்மானத்தை மேற்கொள்வது இந்நடைமுறையாகும். பூக்கட்டலில் வெளிப்படும் தீர்மானம் கடவுளின் தீர்மானமாகக் கருதப்படும். இதனால் சஞ்சலங்களுக்கு இடமிருக்க வாய்ப்பிருக்காது.

குறித்த ஆலயத்துக்குச் செல்லும் ஒருவர் அவ்வாலயப் பூசகரிடம் பூக்கட்டுதல் செயற்பாட்டை நிகழ்த்தும்படி வேண்டி நிற்பார். பூசகரும் அவ்வேண்டுதலைப்

பக்திபூர்வமாக உள்வாங்கி, ஆலயத்தினுள் சென்று சிவப்பும், வெள்ளையுமாக இரண்டு பொட்டலப் பூக்களைத் தயார் செய்து, மூலவரின் பாதத்தில் வைத்துப் பூசை செய்த பின்னர் உள்மண்டப வாயிற்படியில் அப்பொட்டலங்களை பரப்பிவிடுவார். அல்லது பூசைத்தட்டில் அவற்றை வைத்து நீட்டுவார். எச்சந்தர்ப்பத்திலும் பூசகர் குறித்த பூப்பொட்டலங்களைத் தனது கையினால் எடுத்துக் கொடுக்கமாட்டார். பூக்கட்டல் செயற்பாட்டை மேற்கொள்பவர் அப்பொட்டலங்களில் ஒன்றை இறைவனைத் தியானித்தபடி எடுத்து, ஆவலுடன் பிரித்துப்பார்ப்பார். எண்ணிய எண்ணமும் வெள்ளைப்பூவும் ஒன்றுசேர்ந்தால் தான் நினைத்தது சரியே என்ற மனநிறைவுடன் உரிய வழிபாடுகளை ஆற்றி ஆலயத்தைவிட்டு அகன்று செல்வார். சிவப்புநிறப் பூப்பொட்டலம் தேர்வானால் தாம் எடுத்தமுடிவு தவறு என்பதை உணர்ந்து அதற்கு ஏற்ப நடந்துகொள்வர். கிராமியப்பண்பாட்டில் இன்றுவரை இந்நடைமுறை உயிர்த் துடிப்புடன் நிலவிவருகிறது. திருமண நிச்சயங்கள் பலவும் இவ்வாறான செயற் பாட்டின் மூலமும் மேற்கொள்ளப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

## தடைவெட்டுதல்

ஒருவர், தனக்குப் பிறரால் மேற்கொள்ளப்படுகின்ற செய்வினை, சூனியம், வசியம் முதலானவற்றால் பெரிதும் பாதிப்படையக்கூடும். செய்வினை, சூனியம், வசியம் முதலான செயற்பாடுகள் தொடர்பான வலுவான நம்பிக்கை இன்றும் தமிழ்ச்சமூகத்தில் பரவலாக வழக்கில் உள்ளது. இந்த விடயங்கள் குறித்து ஒருவர் கருத்தில் எடுத்தாலே அது அவரது உடலுக்கும் உளத்துக்கும் கேடான ஒரு விடயமாக அமைந்துவிடும். படித்தவர்கள் இவற்றினை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை.

தொடர்ச்சியான உடல்நலக்குறைவால் வருந்துபவர்கள், அதனைத் தமக்கு பிறரால் வைக்கப்பட்ட செய்வினை, சூனியத்தால் வந்த வினையாகவே கருதிக் கொள்கின்றனர். நவீன மருத்துவ நடைமுறைகள் தோற்றுப்போகும் சூழ்நிலைகளில் இந்த நம்பிக்கை மேலும் வலுப்பெறும். இவ்வாறான சூழ்நிலைகளில் பாரம்பரிய மருத்துவ நடைமுறைகளின் ஒரு பிரிவான மந்திரசமய மருத்துவ நடைமுறையின் மீது பாதிக்கப்பட்டவருக்கு ஒருவித ஈர்ப்பு வந்துவிடும். அதன்பிரகாரம் மந்திரவாதி அல்லது நம்பிக்கைக்குரிய பூசகரை அணுகி, தமது செயற்பாடுகளுக்கு எதிரிகளால் வைக்கப்பட்டுள்ள தடைகளை உரியமுறைப்படி “வெட்டுதல்“ செய்வர். இதனையே “தடைவெட்டுதல்” எனக் குறிப்பிடுவர்.

மாந்திரீகத்தில் நிபுணத்துவம் உள்ளவர்களே இத்தடைவெட்டும் காரியத்தை நிறைவேற்ற வல்லவர்களாகக் காணப்படுகின்றனர். நீற்றுப்பூசனிக்காய், எலுமிச்சம் பழம் முதலானவற்றை வெட்டிக் குங்குமத்தைப் பூசுவது இச்செயற்பாட்டின் ஒருவித நடைமுறையாகும். பாதிப்புக்குள்ளானவரின் வீட்டுச் சுற்றுப்புறங்களில் எதிரிகளால் புதைத்துவைக்கப்பட்ட செய்வினைப்பொருட்கள் எனச் சிலவற்றை “அகழ்ந்து” எடுப்பதன்மூலம் இந்நோயால் பீடிக்கப்பட்டவரை அந்நோயின் பாதிப்பிலிருந்து மீட்டெடுக்க முயல்வர். தடைவெட்டுச் செயற்பாடு தொடர்பான பரிகார நடைமுறை கள் மற்றும் பிரதான அனுட்டானங்கள் குறிப்பிட்ட சில காலம்வரை நீண்டு செல்வதுண்டு.

தாயத்துக்கட்டுதல்

உடல், உளப்பாதிப்புக்குள்ளானவரின் நலன் வேண்டிப் பல்வேறு வகையான தாயத்துக்களைப் பல்வேறு வடிவங்களில் கைகளிலும் (மணிக்கட்டு மற்றும் தோட்பட்டைக்குக் கீழானபகுதி), அரையிலும் கட்டுதல் ஒருவகை மரபுவழிச் சீர்மியச் செயற்பாடாக உள்ளது. பெரும்பாலும் பூசாரிகளே இத்தாயத்துக்களைத் தயார்செய்து கட்டிவிடுகின்றனர். வெள்ளி, செம்பு, பொன் முதலான உலோகங்களை இச்செயற் பாட்டிற்குப் பயன்படுத்துவர். கோதாக உள்ள தாயத்தினுள்ளே மந்திரித்த செப்புத் தகடுகள் மற்றும் பிற மந்திரித்த பொருட்களை உட்செலுத்தி அடைத்து வைப்பதன் மூலம் தாயத்துக்கள் தயார்செய்யப்படும். செவ்வாய், வெள்ளி முதலான புனித நாட்களில் குறித்த ஆலயங்களின் பூசை வழிபாடுகளின் நிறைவில் இந்தத் தாயத்துக்கள் வேண்டியவர்களுக்கு அணிவிக்கப்படும்.

தாயத்துக்களைக் கட்டிக்கொள்ளும் ஒருவர் அத்தாயத்துக்கள் தன்னை அண்டிவரும் வினைகளிலிருந்து போதுமான பாதுகாப்பை வழங்கும் என்பதில் அசையாத நம்பிக்கையினைக் கொண்டிருப்பார். இந்த ஒரு நம்பிக்கையே அவரை வெகுவாகக் குணப்படுத்திவிடும்.

புத்திமதிகூறுதல்

மரபுவழிச் சீர்மியச் செயற்பாட்டில் "புத்திமதி கூறுதலும்" பெருவழக்கான ஒரு நடைமுறையாக உள்ளது. உடல் மற்றும் உளப்பாதிப்புக்குள்ளானவரிக் நிலையினை உணர்ந்து பொருத்தமான புத்திகளை அவருக்குத் திகட்டாத வகையிலே சொல்லுதல் என்பது இந்நடைமுறையாகும். (சிவலிங்கராஜா. சி., 2003: ப. 69)

குடும்பத்தில், சமூகத்தில், ஊரில் மிகவும் மதிப்பான நிலையில் இருப்பவர் களைக் கொண்டு இச்சீர்மியச் செயற்பாடு நிறைவேற்றப்படுதல் மரபு. கேடபவரின் மனநிலைக்கேற்ப இச்செயற்பாடு நீண்டுசெல்லும். புராண, இதிகாச மற்றும் நாட்டுப் புறக்கதைகளில் வருகின்ற பொருத்தமான எடுத்துக்காட்டுகளை முறைப்படுத்திக் கூறுவதனூடே குறித்த நபரின் உளப்பாதிப்பு கொஞ்சம் கொஞ்சமாகக் களையப்படும்.

புத்திமதி கூறுவோர் உரிய முன்னேற்பாட்டின்படி பாதிப்புக்குள்ளானவரின் இருப்பிடத்துக்கு அழைத்துவரப்படுவர். பாதிப்புக்குள்ளானவர் பார்வையில், அவர் தற்செயலாகத் தன்னைச் சந்தித்ததாகவே தென்படுவார். "பலதையும் பக்குவமாகச் சொல்லுதல்" என்பது இச்செயற்பாட்டின் பிரதான அம்சமாகும். உரிய பின்னூட்டலின் (Feed back) பிரகாரம் அவ்வப்போது புத்திமதி கூறுதல் நடைபெறும். பெரும்பாலான உளப்பாதிப்புக்கள் இவ்வாறான செயற்பாட்டினால் களையப்படு வதனைக் காணமுடிகிறது.

கண்ணூறு அல்லது நாவூறு கழித்தல்

கண்பார்வை மற்றும் நாவால் ஏற்படும் ஊறுகளினால் ஒருவருக்கு ஏற்படும் தாக்கங்களிலிருந்து விடுவிக்கும் செயற்பாடு இதுவாகும். இந்த மரபுவழிச் சீர்மியம் இன்றுவரையும் வலுவுடன் வழக்கத்தில் இருந்துவருகின்றது. குறிப்பாகக் குழந்தைகள் தொடர்பிலும் வணிக வியாபாரங்கள் தொடர்பிலும் இந்நடைமுறைகளை இன்றும் பரக்கக் காணமுடிகிறது.

கழிப்புச் செயற்பாட்டின் மூலம் தீயபார்வைகள் அழிக்கப்படுதலால் உளப்பாதிப்புக்குள்ளானவர் மனநிம்மதியடைவார். இது தொடர்பான விரிவான ஆய்வை இந்நூலின் பிறிதொரு பகுதி மேற்கொண்டுள்ளதால் அதுபற்றிய மேலதிக விபரங்களை இவ்விடத்தில் தவிர்க்கப்படுகின்றன.

## முடிவுரை

மேலே சுட்டியவாறான பல்வேறு மரபுவழிச் சீர்மிய முறைகளைத் தமிழர் பண்பாட்டு மரபில் இன்றும் பார்க்கமுடிகிறது. நவீன உளவியலாளர்கள் குறிப்பிடும் பின்னைப் புதுமையான சிகிச்சை முறைகள் பலவற்றுக்குமான தோற்றுவாய்களையும், அடிப்படைகளையும் இவ்வகையான சீர்மிய நடைமுறைகளில் கண்டுகொள்ள முடிவது தொன்றுதொட்டு தொடர்ந்துவரும் தமிழர்களின் அறிவுத்திறனுக்குச் சான்றுகளாக அமைகின்றன.

## பயன்படுத்தப்பட்ட துணைநூல்கள்


சாந்தி. ந., பார்க்கவகுலச் சடங்குகளும் நம்பிக்கைகளும், குமரன் பதிப்பகம், வல்லம், தஞ்சாவூர், 1996.

சிவலிங்கராஜா. எஸ்., யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2003.

சிவலிங்கராஜா. எஸ்., யாழ்ப்பாணப் பண்பாடு: மறந்தவையும் மறைந்தவையும், குமரன் புத்தகஇல்லம், கொழும்பு, 2014.

சிவத்தம்பி. கா. (பதி. ஆ)., இலங்கைத் தமிழர் நாட்டார் வழக்காற்றியல், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், 1980.

சிவசுப்பிரமணியன். ஆ., மந்திரமும் சடங்குகளும், மக்கள் வெளியீடு, சென்னை, 1999.

தயா சோமசுந்தரம், சிவயோகன். சா., தமிழர் சமுதயத்தில் உளநலம், பண்பாடுகளினூடான உளசமூக நிறுவனம், யாழ்ப்பாணம், 2000.

பக்தவச்சலபாரதி. சீ., பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990.

வலிகாமம், வடமராட்சி, தீவகம் மற்றும் தென்மராட்சிப் பிரதேசங்களில் 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட களஆய்வுத் தரவுகள்.

விசாகரூபன். கி., நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம், மலர்பதிப்பகம், கந்தர்மடம், யாழ்ப்பாணம், 2009.

ஸ்டீபன். ஞா. (தொ. ஆ)., பண்பாட்டுவேர்களைத்தேடி, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுமையம், பாளையங்கோட்டை, 1999.